சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில்

# உடல் உறுப்புக் கொடையாளிகளுக்கு தியாகச் சுவர்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தனர்!

சென்னை, நவ.7-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (06.11.2025) சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில், உடல் உறுப்பு கொடையாளர்களை போற்றும் தியாகச்சுவரை திறந்து வைத்து, HAND IN HAND INDIA மற்றும் NORTHERN ARC CAPITAL சார்பில் ரூ.87.76 இலட்சம் மதிப்பீட்டில் 3 புதிய அவசர கால ஊர்திகள் 108 சேவையின் கீழ் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து, சென்னை மருத்துவக்கல்லூரி முன்னாள் மாணவர்கள் தலைமை அலுவலகத்தை திறந்து வைத்தார்கள். பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, உடலுறுப்பு தானம் செய்த 253 தியாக சீலர்களுக்கு அவர்களது பெயர், ஊர் மற்றும் தேதி பொறிக்கப்பட்டுள்ள தியாகச் சுவர் (wall of honor) இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. உடலுறுப்பு தானத்தைப் பொறுத்தவரை தமிழ்நாடு அரசு மூளைச்சாவு அடைந்தவர்களை மருத்துவ ரீதியாக சான்று அளிப்பதிலும் அவ்வாறு மூளைச்சாவு அடைந்தவர்களிடமிருந்து உடலுறுப்புகளை தானமாக பெறுவதற்கு அவரவர் குடும்பத்தாரிடம் விருப்பத்தை கேட்டுப் பெற்று உடலுறுப்புகள் பெற்று தேவைப்படும் பயனாளிகளுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இந்திய அளவில் மட்டுமல்ல உலகளவில் தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கான காரணத்தை அனைவரும் நன்றாக அறிவார்கள். 2008-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 05-ஆம் தேதி அன்றைய தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் Transplant authority of tamilnadu (TRANSTAN) என்கின்ற அமைப்பை தொடங்கி தமிழ்நாடு அரசின் மூளைச்சாவு உறுப்புமாற்று சிகிச்சை திட்டத்தை அன்றைக்கு தொடங்கி வைத்தார்கள்.

இந்தியாவிலேயே முதன் முறையாக வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தொடங்கப்பட்ட இந்த அமைப்பில் மூளைச்சாவு அடைந்தவர்களையும், உறுப்புக் கொடை பயனாளர்களை தேர்வு செய்வது போன்ற பணிகள் நெறிமுறைப்படுத்தப்பட்டு சிறந்த முறையில் செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் 2008-ஆம் ஆண்டு முதல் தற்போது வரை TRANSTAN அமைப்பு தொடங்கப்பட்டதற்கு பிறகு மூளைச் சாவு அடைந்து உடலுறுப்புகளை கொடையாக வழங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை 253 பேர், இவர்களுடைய பெயர்கள், ஊர்கள் ஆகியவற்றை குறிப்பிட்டு wall of honour என்கின்ற வகையில் தியாகச் சுவர் ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலுக்கேற்ப, இந்தப் பணி இன்று தொடங்கி வைக்கப் பட்டிருக்கிறது.

சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை மட்டுமல்லாமல் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 36 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைகளிலும் எங்கெயெல்லாம் மூளைச்சாவு அடைந்தவர்களிடம் உடலுறுப்பு தானம் பெறப்படுகிறதோ அங்கெயெல்லாம் இந்த தியாகச் சுவர் கட்டப்படவிருக்கிறது. இதன் தொடர்ச்சியாக இங்கு தொடங்கப்பட்டுள்ளது. இதுபோல் wall of honour என்பது குறிப்பாக அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் நகரில் இரண்டாம் உலகப் போரில் உயிர்நீத்தவர்கள், வியட்நாம் போரில் உயிர்நீத்த அமெரிக்க போர் வீரர்கள் பெயர்கள் இதுபோன்றுதான் வரிசைப்படுத்தி அவர்களுடைய பெயர்கள் கல்வெட்டில் வைத்திருப்பார்கள். அதுபோல் இன்றைக்கு குறிப்பாக தமிழ்நாட்டில் மூளைச்சாவு அடைந்து உடலுறுப்பு தானம் செய்தவர்களின் தியாகத்தை போற்றுகின்ற வகையில் இந்த திட்டம் இன்று தொடங்கப் பட்டிருக்கிறது.

### உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை

முதலமைச்சர் அவர்கள் கடந்த 2023 செப்டம்பர் திங்கள் 23-ஆம் தேதி உடலுறுப்பு தானம் செய்பவர்களின் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அந்தவகையில் உடலுறுப்பு தானம் செய்தவர்களின் திருவுடலுக்கு மாவட்ட ஆட்சி நிர்வாகத்தின் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்ட வருவாய் அலுவலர் போன்ற மாவட்ட அளவிலான அலுவலர்கள் அரசு மரியாதை செலுத்தி வருகிறார்கள்.

இந்த திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தை அறிவித்த பிறகு இதுவரை 553 பேர் உடலுறுப்பு தானம் செய்து அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டிருக்கிறது. இப்படி 2 ஆண்டுகளில் மட்டும் இவ்வளவு பேர் உடலுறுப்பு தானம் செய்திருப்பது என்பது இந்திய அளவில் தமிழ்நாடு தான் இன்றைக்கு முதலிடத்தில் இருக்கின்றது.

கடந்த 6 ஆண்டுகளாகவே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தை தொடங்கி வைத்ததற்கு பிறகு இந்திய அளவில் தமிழ்நாடு இத்திட்டத்திற்காக ஒன்றிய அரசின் பல விருதுகளை ஆண்டு தோறும் பெற்று வருகிறது. அந்த வகையில் கடந்த ஆண்டும் கூட அதிக அளவில் உடலுறுப்பு தானம் செய்தவர்கள் என்கின்ற வகையில் தமிழ்நாடு முதலிடத்தை பிடித்தது. இந்த திட்டம் அறித்த பிறகு இதுவரை உடலுறுப்பு தானம் பதிவு செய்திருப்பவர்கள் 23,189 பேர். இப்படி இந்திய அளவில் மட்டுமல்ல உலகளவில் இந்த சிறப்புக்குரிய திட்டத்திற்கு மேலும் நிறைவேற்றுகின்ற வகையில் wall of honour நிறுவப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதிலும் இது போல் நிறுவப்படவிருக்கிறது.

### சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை வசதிகள்

சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையைப் பொறுத்தவரை பல்வேறு சிறப்புகளை கொண்ட மருத்துவமனையாக இருந்துக் கொண்டிருக்கிறது. இன்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக முன்னாள் மருத்துவ மாணவர்களின் சங்க அலுவலகம் ஒன்றை திறந்து வைத்திருக்கிறோம். இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பது உலகளவில் பழமை வாய்ந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனை.

ஏறத்தாழ 190 ஆண்டுகளை கடந்து 200வது ஆண்டை நோக்கி பயனித்து வருகிறது. ஆக இம்மருத்துவமனையில் முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்து ஒரு சங்கம் ஒன்று நிறுவப்பட்டு அந்த சங்கத்திற்கான அலுவலகம் கடந்த காலங்களில் இந்த மருத்துவமனையின் தொடக்க நிலையில் முதல்வர் அலுவலகமாக இருந்த அந்த அலுவலகம் இப்பொழுது அந்த சங்கத்திற்கான அலுவலகமாக இப்பொழுது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இன்றைக்கு முதலமைச்சர் அவர்களால் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தொடர்ந்து ஊக்குவித்து வருகிறார்கள். தமிழ்நாட்டில் CSR மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியோடு தொடர்ந்து பல்வேறு திட்டங்கள் இந்த மருத்துவ நிர்வாகத்திற்கு கிடைத்துக் கொண்டு வருகிறது. அந்த வகையில் தான் இன்றைக்கு கூட மூன்று வாகனங்கள் Hand in Hand India என்கின்ற அமைப்பின் CSR பங்களிப்பில் மூன்று 108 அவசர கால ஊர்திகள் இன்றைக்கு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. அந்த நிறுவனத்திற்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை அரசு இராஜீவ் காந்தி பொது மருத்துவமனையைப் பொருத்தவரை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, இந்த மருத்துவமனையில் மட்டும் ரூ.74.50 கோடி மதிப்பிலான பல்வேறு கட்டிடங்கள் பல்வேறு மருத்துவ உபகரணங்கள் தொடர்ந்து தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ரூ.1.69 கோடி மதிப்பீட்டில் ஒரு அவசர கால சிகிச்சை மையம், ரூ.29.93 கோடி மதிப்பீட்டில் தொற்று நோய் சுவாச அவசர மற்றும் தீவிர பரமரிப்பு சிகிச்சைகளுக்கான பிரிவு, அதேபோல் மருத்துவர் ஓய்வு அறை மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, அதோடு மட்டுமல்லாமல் சிறுநீரக அறுவை சிகிச்சை துறையில் நவீன மருத்துவ உபகரணங்கள் இன்டிரா வாஸ்குலர் அல்ட்ரா சவுண்ட் கருவி, எக்கோ கருவி போன்றவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையில் ரூ.9.80 கோடி மதிப்பீட்டில் கதிரியக்க அலைவீச்சு கருவி மற்றும் மின்தூக்கிகள் மாற்றி அமைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாது இரத்த நாள அறுவை சிகிச்சை உயர் சிறப்பு நிலையம், தன்னியக்க நரம்பு மண்டல ஆய்வகம் இருதய நோய் சிறப்பு பரிசோதனை மற்றும் பல்வேறு வசதிகள் திறந்து வைக்கப்பட்டது. மேலும் நவீன சமயலறை பல்வகை கைபேசி மின்னேற்ற நிலையம், பட்டமேற்படிப்பு மருத்துவ மாணவர்கள், தங்கும் அறை, வண்ண படுக்கை விரிப்புகள் மற்றும் நோய் தகவல் ஏடுகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவைகளையும் கடந்து முதலமைச்சர் அவர்கள் இந்த மருத்துவமனையில் பெருகி வருகின்ற மருத்துவச்சேவையை கருத்தில் கொண்டு, இதை இன்னமும் கூடுதலாக தரம் உயர்த்துவதற்கு ரூ.132.24 கோடி மதிப்பீட்டில் 2,53,543 சதுர அடி பரப்பளவில் 15 தளங்களுடன் கூடிய முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கான விடுதி கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதேபோல் ரூ.65 கோடி செலவில் 1,12,246 சதுரஅடி பரப்பளவில் 4 தளங்களுடன் கொண்ட நரம்பியல் துறை கட்டிடம் கட்டிடப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மிக விரைவில் அதற்கான உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது. அதோடு தற்போது ஏறக்குறைய ரூ.200 கோடிக்கான திட்டப்பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. மேலும் இம்மருத்துவ மனையில் புற நோயாளிகள் தொடர்ச்சியாக அதிகமாக வரும் காரணத்தினால் மேலும் தரம் உயர்த்தும் பணிக்கு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தவகையில் "தியாகச் சுவர்" எனும் புதிய முயற்சி இன்று தொடங்கப்பட்டுள்ளது. உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை என்பதை பிற மாநிலத்தவர்கள் நம்மிடம் கேட்டறிந்து அவர்களும் அவர்கள் மாநிலத்தில் பின்பற்ற உள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராமன், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், பொதுப்பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் கார்த்திகேயன், செயற்பொறியாளர் அழகிரிசாமி, மருத்துவப் பேராசிரியர்கள் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.




சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் உடல் உறுப்பு கொடையாளர்களை போற்றும் தியாகச் சுவரை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் மேயர் பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் உடன் உள்ளனர்.




மதுரவாயல் தொகுதி, வார்டு–150, காரம்பாக்கம், பொது சுகாதாரம் கால்நடை மருத்துவத் துறை, தெரு நாய்களுக்கு நோய் தடுப்பூசி மற்றும் அகபுற ஒட்டுண்ணி நீக்கம் மருந்து செலுத்தும் திட்டம் நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி திட்டத்தை துவங்கி வைத்தார். உடன் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., வட்ட கழக செயலாளர்கள் சி.சுந்தர், எஸ்.ஜி.மாதவன், மாமன்ற உறுப்பினர்கள் ஹேமலதா கணபதி, எஸ்.பாரதி மற்றும் மு.ஆறுமுகம், ஆர்.எஸ்.தில்லைவாணன், மா.பா.சித்ராலயம், அ.கவுஸ்பாஷா, எஸ்.குட்டி (எ) குருசாமி மற்றும் கழக நிர்வாகிகள், அதிகாரிகள், கலந்து கொண்டனர்.

## இன்று தி.மு.க. மாணவர் அணி

## மாவட்ட, மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் வழிகாட்டுதலின் பேரில், தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், இன்று (7.11.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், சேலம், "தீர்த்தமலை திருமண மண்டபத்தில்", சுற்றுலாத் துறை அமைச்சரும் - சேலம் மத்திய மாவட்டச் செயலாளருமான **ஆர்.இராஜேந்திரன்**, தலைமையில், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் **எஸ்.ஆர்.சிவலிங்கம்**, எம்.பி., - சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் **டி.எம். செல்வகணபதி**, எம்.பி., ஆகியோர் முன்னிலையில், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றிட நடைபெறும்.

அதுபோது மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் புதுச்சேரி மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் :** 1) துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள்; 2) கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ள "தமிழ் மாணவர் மன்ற" உறுப்பினர் படிவம் ஒப்படைத்தல், 3) மாணவர் அணியின் ஆக்கப் பணிகள் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள்: 31.10.2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.



சோழிங்கநல்லூர் தொகுதி மண்டலம் 15 வார்டு எண் 197 சென்னை துவக்கப்பள்ளியில் சென்னை மாநகராட்சியின் 2025–2026–ஆம் ஆண்டு மூலதன நிதியிலிருந்து ரூபாய் 1 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் கட்டும் பணியினை சட்டமன்ற உறுப்பினர்எஸ். .அரவிந்த்ரமேஷ் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், வட்ட செயலாளர் தேவக்குமார், மாவட்டப் பிரதிநிதி எஸ்.ஆர்.உமாபதி, சி.கோபால் உள்ளிட்ட கழகத்தினர், ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வரத. கோபாலகிருஷ்ணன்

### நவம்பர் 7 (2001)



திருவாரூர் மாவட்டக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியப் பெருந்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

நன்னிலம் பகுதியில் கழகம் வளர்க்க பாடுபட்டவர். வாழ்நாள் முழுவதும் இயக்கப் பணிகளுக்காக தன்னையே அர்ப்பணித்தவர்.

நெருக்கடி நிலையின்போது ஓராண்டு சிறைவாசம். மேலும், கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சோழிங்கநல்லூர் தொகுதி

# 188-வது வார்டு மடிப்பாக்கத்தில் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. ஆய்வு

### சமீனா செல்வம் எம்.சி.– வட்டச் செயலாளர் சுரேஷ் பங்கேற்பு

சென்னை, நவ. 7 -

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி 188-வது வார்டில் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் நேற்று முன்தினம் பொது மக்களிடம் குறைகள் கேட்டறிந்து, துறை அதிகாரிகளிடம் எடுத்துரைத்து பணிகள் மேற்கொள்ளு மாறு கேட்டுக்கொண்டார்.

சோழிங்கநல்லூர் தொகுதி 188-வது வார்டு மடிப்பாக்கத்தில் பொது மக்களின் புகாரின் அடிப்படையில் துறை சார்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களுடன் ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார்,

இந்த பகுதியில் மழைநீர் வடிகால்வாயை தூர்வார வேண்டும், மழைநீர் வடிகால்வாயில் தேங்கியிருந்த கழிவுகளை அகற்றப்பட வேண்டும், மற்றும் ஆபத்தான முறையில் இருந்த மின்சார கேபிள்களையும் சரி செய்ய வேண்டும். மற்றும் இந்த பகுதியில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் உள்ளன. ஆனால் 1500 வீடுகள் மட்டும் பாதாள சாக்கடை இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளுக்கு உடனடியாக நாளைய தினம் வீடு வீடாகச் சென்று இந்த திட்டத்தைப் பற்றி பொது மக்களுக்கு எடுத்துரைத்து இந்த திட்டத்தில் அவர்களை உடனடியாக சேர்க்க வேண்டுமென அதிகாரிகளிடம் கூறினார்.

அதுபோது சமீனா செல்வம் எம்.சி. வட்ட செயலாளர் சுரேஷ் உள்ளிட்ட மாநகராட்சி அரசு அதிகாரிகள் அனைவரும் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. வேல்சாமி

### நவம்பர் 7 (2007)



இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் பகுதியில் முதன்முதலாக பல்வேறு கிளைக் கழகங்களை அமைத்தவர்.

மோகனூர் கிளைக் கழகம் அமைத்து, அதன் செயலாளர் பின்னர் மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1996ல் நாமக்கல் தொகுதியில் கழக சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**